செ.வெ.எண்:12 நாள்:11.09.2021

**மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டம் முழுவதும் நாளை நடைபெற உள்ள மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக தமிழக அரசின் சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.**

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மயிலாடுதுறை மாவட்டத்தில் நாளை (12.9.2021) நடைபெற உள்ள மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக தமிழக அரசின் சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது…

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கொரோனா தடுப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா தடுப்பூசி பணிகளும் தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட்டு வருகிது. அந்தவகையில் நாளை (12.9.2021) தமிழகம் முழுவதும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடத்த தமிழக அரசால் திட்டமிடப்பட்டு, அதற்குரிய பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.மயிலாடுதுறை மாவட்டத்தில் 5 ஒன்றியத்திற்குட்பட்ட 406 ஊராட்சிகள், இரண்டு நகராட்சிகளில் 22 இடங்கள், நான்கு பேரூராட்சிகளில் 24 இடங்கள் , 31 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 6 மருத்துவமனைகள், 10 நடமாடும் கொரோனா தடுப்பூசி குழுக்கள் மூலம் மொத்தம் 499 இடங்களில் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.இக்கொரோனா தடுப்பூசி முகாம் பணியில் 364 செவிலியர்கள், 114 மருத்துவர்கள் ஈடுப்படுத்தப்பட உள்ளனர். இதுதவிர வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் இம்மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் பணியில் ஈடுப்படுத்தப்பட உள்ளனர்.

பொதுமக்களுக்கு ஓர் வேண்டுகோள் இந்நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வது அவசியமான நிலையாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு தடுப்பூசி போடுவதை மக்களுக்கு எளிதாக்கி தட்டுப்பாடின்றி தடுப்பூசிகள் இருப்பு வைத்து தொடர் கொரோனா தடுப்பூசி முகாம்களை நடத்தி வருகிறது. எனவே பொதுமக்கள் தங்களையும், தங்கள் சமுதாயத்தையும் இந்நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஒரே வழி கொரோனா தடுப்பூசி என்பதனை அறிந்து உடனடியாக தடுப்பூசி போட்டுக் கொண்டு பயனடையுமாறு சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.முருகதாஸ், சுகாதாரத்துறை இணை இயக்குநர் (சென்னை) மரு.விஜயலெட்சுமி, சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.பிரதாப், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.இரா.வைத்தியநாதன், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.பாலாஜி, திரு.நாராயணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.